Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 313

திங்கட்கிழமை
06 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## செம்மணிப் புதைகுழிக்கு நீதி கோரிப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.6
செம்மணி மனிதப்புதைகுழிக்குநீதிகோரியாழ்ப்பாணம் பஸ் நிலையத்தின் முன்பாக இன்று அமைதிவழிப் போராட்டம் ஒன்று முன்னெடுக் கப்படவுள்ளது என்று வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உற 11

## இலங்கை தொடர்பான
# ஜெனிவாத் தீர்மானத்துக்கு 22 நாடுகள் அனுசரணை!

கொழும்பு, ஒக்ரோபர் 6
இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையை நீடிப்பதற்கான திருத்தப்பட்ட வரைவுக்கு இணை அனுசரணை வழங்க 22 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன. 11

## அஞ்சல் உதவியாளர்கள் 731 பேருக்கு நியமனங்கள்

கொழும்பு, ஒக்.6
அஞ்சல் உதவியாளர் தரம் III பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட 731 பேருக்கு இன்று நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன. சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில், அலரிமாளிகை வளாகத்தில் இந்த 11

## பிற்பகலில் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஒக்.6
நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகலில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
வடக்கு, வடமத்தி, கிழக்கு, மத்தி மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் 11



## விற்ற பொருளுக்குப் பணம் கேட்ட கடை உரிமையாளர் குத்திக்கொலை

### யாழ்ப்பாணம், ஏழாலையில் கொடூரம்

யாழ்ப்பாணம், ஒக்.6
யாழ்ப்பாணம், ஏழாலையில் நேற்று முன்தினம் நடந்த கத்திக்குத்துச் சம்பவத்தில் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
ஏழாலை கிழக்கைச் சேர்ந்த சி.தனவன் (வயது-35) என்பவரே உயிரிழந்தவராவார். 11



## ஹெரோய்ன், ஐஸுடன் குருநகரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.6
ஹெரோய்ன், ஐஸ் போதைப்பொருள்களையும், போதை மாத்திரைகளையும் உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் குருநகர் பிரதேசத்தில் ஒருவர் யாழ். மாவட்டக் 11



## குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிருவருக்கு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஒக்.6
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த தளபதிகான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 பேரின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித் 11

## மாங்குளத்தில் மீட்கப்பட்ட என்புக்கூடு

முல்லைத்தீவு, ஒக்.6
முல்லைத்தீவு, மாங்களம் நகர் பகுதியில் உள்ள காணியில் மனித என்புக்கூடு ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.
அந்தக் காணியின் ஒரு பகுதி பற்றைக்காடாகவுள்ள நிலையில், அதற்குள் மனித என்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
அந்தப் பகுதிக்குச் சென்ற ஒருவர் மனித 11



## அரசாங்கத்தை ஒன்றுகூடி வீழ்த்த எதிரணிகள் வியூகம்!

### கொழும்பில் பேரணி நடத்தவும் திட்டம்

கொழும்பு, ஒக்.6
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வரும் சர்வாதிகார அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்ப்பு பேரணியை கொழும்பில் நடத்துவதற்குத் தீர்மா 11



### முச்சந்தி முரளி

"பல எலியள் சேர்ந்தா புத்தெடுக்கமுடியாது எண்டது உவைக்கு விளங்கேலை கண்டியளோ"

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்தது சர்வதேச விருது!

கொழும்பு, ஒக்.6
உலகின் இந்த ஆண்டின் சிறந்த தேர்தல்கள் ஆணைக்குழுவாக இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவாகியுள்ளது. பொட்ஸ்வானாவின், காபோரானில் நடைபெற்ற 11

## யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட இளங்கலைமாணி ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஒக்.6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஐந்தாவது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.
பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் 11

## பதில் கடமைகளை கைவிடும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்!

கொடுப்பனவு இழுத்தடிப்பால் தீர்மானம்

விரிவு பக்கம் » 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 05.10.2025 | திகதி 05.10.2025 | திகதி 05.10.2025 | திகதி 05.10.2025 | திகதி 05.10.2025 | திகதி 05.10.2025 | திகதி 05.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 12821 | சீட்டிழுப்பு இலக்கம் 0241 | சீட்டிழுப்பு இலக்கம் 2321 | சீட்டிழுப்பு இலக்கம் 5973 | சீட்டிழுப்பு இலக்கம் 2003 | சீட்டிழுப்பு இலக்கம் 0548 | சீட்டிழுப்பு இலக்கம் 0089 |
| வெற்றி இலக்கினம் கடகம் | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து T; சுப்பர் இலக்கம் 03 | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து Z | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கினம் |
| வெற்றி இலக்கங்கள் 09 11 42 47 | வெற்றி இலக்கங்கள் 2 7 5 4 | வெற்றி இலக்கங்கள் 03 16 25 49 | வெற்றி இலக்கங்கள் 9 5 7 1 0 1 | வெற்றி இலக்கங்கள் 04 50 57 80; விசேட எழுத்து Z | வெற்றி இலக்கங்கள் 7 1 0 1 | வெற்றி இலக்கங்கள் 01 38 52 53 |

# மக்கள் கருத்தைப் புறந்தள்ளுவது ஜனநாயக ஆட்சிக்கு இழுக்கு!

## மன்னார் பொது அமைப்புகள் ஜனாதிபதிக்குக் கடிதம்

**மன்னார், ஒக்.6**

**மன்னார் காற்றாலை விவகாரத்தில் மக்களுடைய வாழ்வியல் உரிமைகளைப் புரிந்துகொள்ளாமல் பொலிஸாரும், அதிகாரிகளும் நடந்துகொள்வது என்பது அடிப்படை உரிமையை மீறுவதுடன் ஜனநாயக ஆட்சிக்கு உரித்துடையது இல்லை.**

இவ்வாறு ஜனாதிபதி அநுர குமாரதிஸாநாயக்கவுக்குநேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்தில் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கடந்த பல வருடங்களாக காற்றாலை மற்றும் கனிம மண் அகழ்வுக்கு எதிராக ஜனநாயகப்போராட்டம் நடத்திவருகிறோம். மக்களினுடைய எதிர்பார்ப்புக்கு மாறாக தாங்களே தீர்மானத்தை எடுத்திருப்பது ஜனநாயக முறைமைக்கு உகந்ததல்ல.

வாதங்கள் என்பது இருதரப்புப் பகிர்வு ஊடாக முரண்பாடுகளைக் களைந்து குறைந்த பட்ச விட்டுக்கொடுப்புடனாவது தீர்மானத்துக்கு வருவதுதான் ஜனநாயகப் பண்பியல்பாகும்.

அரச இயந்திரம் என்பது ஆட்சி மாற்றத்திற்கு பின்னும் காட்சி மாறவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

எமது மக்களுடைய வாழ்வியல் உரிமைகளைபுரிந்துகொள்ளாமல் நடந்துகொள்வது என்பது ஜனநாயக ஆட்சிக்கு உரித்துடையதல்ல. இறுதிமுடிவு எடுப்பதற்கு முதல் எம்முடன் கலந்துரையாடி இருக்கவேண்டியது மக்களாட்சித் தலைமைத்துவத்தின் இலக்கணமாய் இருக்க வேண்டும் என்பதே மரபாகும். எனவே ஒரு தரப்பாக வாதங்களின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பது ஏற்புடையதல்ல. அதை மீள்பரிசீலனை செய்து மீண்டும்எம்முடன்கலந்துரையாடி இறுதித்தீர்மானத்துக்குவரவேண்டும் - என்றுள்ளது. (ச-56)



## திருமதி உலக அழகிப்போட்டி இலங்கைப்பெண் முடிசூடல்

கொழும்பு, ஒக்.6

திருமதி உலக அழகிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிரமாண்டமாக நடைபெற்ற நிலையில் அதன் இறுதிப்போட்டியில் சபீனா யூசுப் என்பவர் "திருமதி இலங்கை உலக அழகி 2025" என முடிசூட்டப்பட்டார்.

உலகளவில் திருமணமான பெண்களுக்கான பழமையான மற்றும் மிகப்பெரிய சர்வதேச அழகுப்போட்டியாக அங்கீகரிக்கப்பட்ட திருமதி அழகி உலக அழகிப்போட்டியில் அவர் இப்போது இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். (ச-இ)

## காங்கேசன்- நாகப்பட்டினம் கப்பல்சேவை தினந்தோறும்

யாழ்ப்பாணம், ஒக்.6

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் கப்பல்சேவை வாரத்தில் அனைத்து நாள்களும் இடம்பெறும் என சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கே.எம்.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் செவ்வாய் தவிர்ந்த ஆறு நாள்களும் குறித்த சேவை இடம்பெற்றுவந்தது.

இந்தநிலையில் தீபாவளியை முன்னிட்டு இந்த மாதம் 8ஆம் திகதிமுதல் இந்த மாதம் 28ஆம் திகதி வரை தினமும் கப்பல் சேவை இடம்பெறும்.

இந்தக் கப்பல் சேவையில் தீர்வை அற்ற கடைத் தொகுதியும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

www.sailsubham.com என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசிப்பதனூடாகவோ அல்லது 0212224647, 0117642117 என்ற இலக்கங்களுக்கு அழைப்பு மேற்கொள்வதன் மூலமாகவோ பயணச்சீட்டுகளைப் பதிவுசெய்துகொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச- 27)

## இலங்கைக்குக் கடத்தவிருந்த கடல் அட்டைகள் பறிமுதல்!



இந்தியா, ஒக்.6

இலங்கைக்கு கடத்துவதற்காக இந்தியாவின் இராமநாதபுரம் அருகே தடைசெய்யப்பட்ட இந்திய மதிப்பில் 10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 250 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளை இந்திய கியூப் பிரிவுப் பொலிஸார் பறிமுதல் செய்ததுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர். அவரிடம் நடத்திய விசாரணையில் தடைசெய்யப்பட்ட கடல் அட்டைகளைப் பதப்படுத்தி கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தத் திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-56-27)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 05.10.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0681 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 6 3 7 2 3 2 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 05.10.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2947 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 18 50 61 64 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 05.10.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 04 37 59 74 |
| வெற்றி வாரம் | 5108 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 05.10.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0785 |
| வெற்றி இலக்கம் | 06 10 21 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 05.10.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| கும்பம் | ♒ |
| வெற்றி இலக்கம் | 18 22 38 45 |
| சீட்டிழுப்பு வாரம் | 4659 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 05.10.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கம் | 09 23 28 53 |
| வெற்றி வாரம் | 2123 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 05.10.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 21 33 46 51 |
| வெற்றி வாரம் | 2773 |

# ஸ்டாலின், விஜய்க்கு கச்சதீவு பகடையல்ல

## வடக்குக் கடற்றொழில் இணையம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.6

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யும் இலங்கையின் இறைமையிலுள்ள கச்சதீவை அரசியலுக்காகப் பயன்படுத்தினால், அவர்களுக்கு எதிராக கடற்றொழில் சமூகம் திரண்டெழும் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக முதலமைச்சர் கச்சதீவை மீட்பேன் என அடிக்கடி கூறி வருகிறார். இவ்வாறு தமிழகக் கடற்றொழிலாளர்கள் வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்படுகிறார்கள்.

அத்துடன் தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய், அரசியல் இருப்புக்காக கச்சதீவு தொடர்பில் பேசுகிறார்.

கச்சதீவு விவகாரத்தால் தமிழ்நாட்டு மீனவர்கள் பாதிக்கப்பட்டதாக ஒருபோதும் வரலாறு இல்லை. இந்திய அரசாங்கம் இந்த விடயத்தை இராஜதந்திர ரீதியில் அணுகவேண்டும். அதைவிடுத்து வடக்கு மாகாண மக்களுக்குச் சொந்தமான கச்சதீவு குறித்து அரசியல் மேடைகளில் பேசி மீனவர்களைத் தூண்டிவிடுவது கண்டிக்கத்தக்கது - என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் காற்றாலைத்திட்டம்; அரசு பேச்சுக்கு வரவேண்டும்

## மன்னார் மீனவ கூட்டுறவுச் சங்கம் வலியுறுத்து

**மன்னார், ஒக்.6**

**மன்னாரில் காற்றாலை விடயம் நீண்டுகொண்டு செல்கிற நிலையில் மன்னார் மாவட்டம் போராட்டத்தினால் முடக்கப்பட்டநிலையில் காணப் படுகின்றது. எனவே மக்களின் அரசாங்கம் என்ற வகையில் அரசு விட்டுக் கொடுத்துப் பேச்சுக்கு வரவேண்டும் என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.**

அவர்மேலும்தெரிவிக்கையில், மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களில் தற்போது காற்றாலை மின் உற்பத்திச் செயற்றிட்டத் துக்கான காற்றாலை கோபுரங் கள் அமைக்கப்படுகின்றன.

குறித்த விடயம் மன்னார் மாவட்டம் மட்டும் இன்றி உள் நாட்டிலும், சர்வதேச ரீதியாக வும் பேசுபொருளாகியுள்ளது. குறித்த காற்றாலைத் திட்டம் மன்னார்த் தீவுப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பாதிப்பு என்பதை ஜனநாயக ரீதியில் குரல்கொடுத்து வருகின்ற மக் களினால் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் மக்களுக் கானது. மக்களின் கோரிக்கை களுக்கு எதிராக நாங்கள் எதையும் செய்யமாட்டோம் என்று கூறி மக்களிடம் வாக்கு களைப் பெற்று வெற்றிபெற்று இன்று இந்த அரசாங்கம் ஆட் சியமைத்துள்ளது. தற்போது மக்களின் கருத்து ஒரு விதத்தி லும், ஜனாதிபதியினுடைய கருத்து இன்னொரு விதத்திலும் அமைந்துள்ளது. மன்னார் மக்களின் போராட்டம் நியாயமா னது. அதற்கான தீர்வு கிடைக்க வேண்டும். எனவே மக்களின் அரசாங்கம் என்ற வகையில் அரசு விட்டுக்கொடுப்புக்கு வர வேண்டும் - என்றார். (ச-56)

# எல்பிட்டியவில் துப்பாக்கிச்சூடு



கொழும்பு, ஒக்.6

எல்பிட்டிய, ஓமத்த பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கி ளில் சென்ற அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார். இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் எவ்வித உயி ரிழப்போ, எவருக்கும் காயமோ ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# பழம்பெரும் நடிகர் சிதம்பரம் மறைவு



கொழும்பு, ஒக்.6

இலங்கையின் பழம் பெரும் நடிகரும் பல விருதுகளுக்கு சொந்தக்காரருமான கலைஞருமான "ராமைய்யா சிதம்பரம்" நேற்றுமுன்தினம் சனிக் கிழமை காலமானார்.

அவரின் பேரிழப்புக்கு இலங்கைக் கலைதுறை யினர் இரங்கல் தெரிவித்துவருகின்றனர். (ச-இ)

# கிளிநொச்சிப் பொலிஸார் இருவர் பணியிடைநீக்கம்

கிளிநொச்சி, ஒக்.6

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் கட மையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தி யோகத்தர்கள் இலஞ்சம்பெற்ற குற்றச் சாட்டில் பணியிடைநீக்கம் செய்யப்பட் டுள்ளனர்.

குறித்த இருவரும் நேற்றுமுன்தினம் பூந கரிப் பகுதியில் கடமையில் இருந்தபோது, கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ்ரீக்கு 108 அவசர தொலைபேசியூடாக குறித்த இரு பொலிஸாரும் இலஞ்சம் பெறுவதாகத் தகவல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து அவர்களிடம் மேற் கொள்ளப்பட்ட சோதனையில் அவர்கள் அன்றையதினம் காலை கடமைக்குச் செல்லும்போது 1000 ரூபா வீதம் 2000 ரூபா மாத்திரமே பதிவுசெய்து எடுத்துச் சென்ற நிலையில் சோதனையின்போது மேலதிகமாக 5 ஆயிரத்து 40 ரூபா காணப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனை அடுத்தே இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் தற்காலிக பணி யிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-113)

# சுற்றுலாவிகள் அதிகரிப்பு

நடப்பாண்டில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை வந்தசுற்றுலாப்பயணிகளின் மொத்த எண்ணிக்கை 17 இலட்சத்து 25 ஆயிரத்து 494 என சுற்றுலா அபிவி ருத்தி அதிகாரசபை தெரிவித் துள்ளது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் வந்த சுற் றுலாப்பயணிகளின் எண் ணிக்கையுடன் ஒப்பிடும் போது இது 30.24% அதிக ரிப்பாகும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-இ)

## யாழ்.பல்கலையின்

# மெய்யியல்துறை தலைவராகத் திலீபன்



யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரவிய நாதன் திலீபன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய் யியல்துறையின் புதிய தலைவரா கப் பொறுப்பேற்றுள்ளார். இதுவரை காலமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவராகத் திருமதி அபிராமி இராஜ்குமார் பதவி வகித்திருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-56)




## கண்ணைக்கட்டிக் கோவம்...!


ஆசியாவிலேயே பொம்பிளைப் பிள்ளையள் தங்கி நிண்டு படிக்கிறதுக்கெண்டு ஹொஸ்டலோட முதலாவ தாக் கட்டுப்பட்ட பள்ளிக்கூடத்தில கிட்டடியில ஒரு சம்பவம் நடந்திருக்கு. அங்க 9 ஆம் ஆண்டு படிக்கிற பிள்ளை யொண்டு மேல்மாடியில இருந்து கீழை குதிச்சுப்போட்டுது. நல்லவேளையா முதலாம் மாடி எண்டதால காலில காயத்தோடையும்,நோவோடையும் அந்தப் பிள்ளை தப்பிட்டுது. அந்தப் பிள்ளை தவறி விழேலையாம். அப்ப ஏன் விழுந்தது எண்டு பள்ளிக்கூடம் முழுக்க ஒரே கேள்வி. அந்தப் பிள்ளைக்கு அப்பா இல்லை, அம்மாவும் வெளிநாட்டில. அதால அந்தப் பள்ளிக்கூட ஹொஸ்டலில இருந்துதான் படிக்குது. கொஞ்சநாளா அந்த வகுப்பில இருக்கிற மற்றப் பிள்ளையள் இந்தப் பிள்ளையோட 'கண்ணைக்கட்டிக் கோபமாம். அதால எப்பவும் இந்தப் பிள்ளை தனியத்தான். மற்ற ஒருத்தரும் கதைக்கிறதோ சிரிக்கிறதோ இல்லையாம். அந்தக் கவலையிலதான் பிள்ளை மாடியில இருந்து விழுந்திருக்கு.

இந்தச் சம்பவத்தில ஆரைத்தான் பிழை சொல்ல ஏலும்? சின்னப்பிள்ளையள் கோபம் போடுறதும், பிறகு நேச மாகிறதும் பள்ளிக்கூட வாழ்க்கையில அடிக்கடி நடக்கும். அப்பிடித்தான் இதிலையும் எண்டால் பிரச்சினை இல்லை. ஆனால் இந்தப் பிள்ளையை வேணுமெண்டே பழிவாங்கிறதுக்காக மற்றப்பிள்ளையள் இவாவை விலக்கி வைச்சிருந்தினமெண்டால் அது பிழைதான். பொதுவா பெடியள் மற்றப் பெடியளில கோபமெண்டால், உடனேயே கோபக்காரனுக்கு அடிச்சு தங்கட கோபத்தை தீர்த்துக்கொள்ளுவாங்கள். முதல்நாள் வகுப்பில அடி பட்ட பெடியள் அடுத்தநாளே தோளுக்குமேல கைபோட் டுக்கொண்டும் திரிவாங்கள். ஆனால் பொம்பிளைப் பிள்ளையள் அப்பிடியில்லை. எதையும் வெளிக்காட் டாமல் தங்களுக்குள்ளேயே எல்லாத்தையும் மறைச்சு வைச்சுக்கொண்டு, வேற விசயங்களில அதைக்காட்டு வினம். அப்பிடித்தான் இந்தப் பிள்ளையிலையும் வகுப்புப்பிள்ளையள் காட்டிச்சினமோ இல்லாட்டி தற்செயலாத்தான் எல்லாரும் கதைக்காமல் விட்டினமோ எண்டது அவையவைக்குத்தான் தெரியும்.

இதில இன்னொரு விசயத்தையும் கவனிக்கோணும். பாதிக்கப்பட்ட பிள்ளை, பெற்றாரை விட்டிட்டு ஹொஸ் டலில இருக்கேக்க, "நான் ஆரும் இல்லாத ஆள்" எண்ட எண்ணம் அடிக்கடி வரும். அப்பகூட இருக்கிறவைதான் ஆறுதலா இருக்கோணும். இந்தமாதிரி நிலையில அந்தப் பிள்ளை தன்ர குடும்பத்திட்ட கிடைக்காத அன்பை, வகுப்புப் பிள்ளையளிட்ட எதிர்பார்த்திருக்கும். அதுவும் கிடைக்காமல் போனதால இப்பிடி மாடியில இருந்து குதிச்சிருக்கலாம். அந்தப் பிள்ளை மட்டுமில்ல, குடும் பத்தை விட்டிட்டு ஹொஸ்டலில தங்கியிருக்கிற எல்லாப் பிள்ளையளுக்குமே இப்பிடி ஒரு தனிமை உணர்வு வரத்தான் செய்யும். அதுக்கு அந்தப் பிள்ளையளுக்கு "உனக்குத் துணையா நாங்கள் எல்லாரும் இருக்கிறம்" எண்டு பள்ளிக்கூடமும், பிள்ளையளும் நடக்கோணும். அதைவிட அந்தப் பிள்ளையளுக்குத் தன்னம்பிக்கை வாற மாதிரி கவுன்ஸிலிங் செய்யிறது திறமான வேலை. அப்பிடிக் கவுன்ஸிலிங் செய்து பிள்ளைக்கு எப்பவும் பொசிட்டிவான எண்ணாங்கள் வரப்பண்ணிட்டால் பிறகு இப்பிடியான சம்பவங்களே நடக்காமல் செய்யாலாம் கண்டியளோ.

padsi@uthayan.com
- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்று (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். இளையசகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தாயாரின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்குப் பணவரவு இருந்தாலும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக முக்கியமான முடிவு எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணை கேட்பதை வாங்கிக் கொடுத்து மகிழ்விப்பீர்கள். உறவினர்கள்மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண்அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். ஆனால், நண்பர்கள் உங்கள் தேவையை அறிந்து செய்யும் உதவி ஆறுதல் தரும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**துலாம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வீட்டுப்பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளையசகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.





# அடியவர்கள் புடைசூழ சித்திரத்தேரில் மாயவர்

யாழ்ப்பாணம், ஒக்.6

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய விசுவாவசு வருடாந்தப் பெருவிழாவின் 15ஆவது நாளான தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. பெரியாழ்வார் இயற்றிய திருப்பல்லாண்டுப் பாடல்கள் பண்ணுடன் ஓதப்பட்டு அதனைத் தொடர்ந்து சிறப்புத் தீபாராதனை வழிபாடுகள் இடம்பெற்றன. சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து அடியவர்கள் வடம் தொட்டிழுக்க முத்தேர் பவனி இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் செய்தும், பல எண்ணிக்கையான அடியவர்கள் பறவைக்காவடிகள், தூக்குக்காவடிகள், செதில் காவடிகள் முதலான காவடிகள் எடுத்தும், அடியளித்தும், பாற் காவடிகள் எடுத்தும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ச-66)

# சிறுவர்தின நிகழ்வும் மூத்தோர் கௌரவமும்

யாழ்ப்பாணம், ஒக்.6

சுன்னாகம் சிவன் சிறுவர் கழகத்தினரின் சிறுவர்தின நிகழ்வும் மூத்தோர் கௌரவமும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சுன்னாகம் கதிரமலைச்சிவன் ஆலய மணிமண்டபத்தில் சிறுவர் கழகத் தலைவர் பிரியகுமார் மலரவன் தலைமையில் நடைபெறவுள்ளன. நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பா.மகாலிங்கசிவம், ஆசிரியைகளான திருமதி க.மகாலிங்கசிவம், திருமதி சிந்துஜா கஜேந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது கலங்கரை இதழ்- 6 நூல் வெளியீடு செய்துவைக்கப்படவுள்ளது. (ச-66)

# வாணிவிழாவும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,ஒக்.6

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச சனசமூக நிலையம் நடத்தும் கணேச முன்பள்ளியின் வாணி விழாவும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கணேச முன்பள்ளியின் முன்றலில் கணேச சனசமூக நிலையத் தலைவர் சி.செல்வஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் உடுவில் பிரதேச செயலக சமுதாயஞ்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.திருச்செந்தூரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)



# சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக்.6

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவனம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பயிற்சி நிலையம் ஆகியன நடத்திய சமஸ்கிருதம், புராண படனம், கதாப்பிரசங்கம் அடிப்படைப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்துக்கற்கைகள் பீடம் பீடாதிபதி கலாநிதி. பிரம்மஸ்ரீ.ச.பத்மநாபசர்மா, சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன், கௌரவ அதிதிகளாக வலிகாமக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர்.செ.கந்தசத்தியதாசன், வண்ணை நாவலர் பாடசாலை ஆசிரியர் ச.நவதீதன் ஆகியோர் புராணபடன வளவாளர்களாகவும், இணுவில் இந்துக்கல்லூரி அதிபர் சீ.சுகுணா, முகாமைத்துவ உதவியாளர் ரவிச்சந்திரன் சுவஸ்திகா ஆகியோர் சமஸ்கிருத வளவாளர்களாகவும், இணுவையூர் ஞானஏந்தல்.ந.பரமேஸ்வரன் கதாப்பிரசங்க வளவாளராகவும் கலந்துகொண்டனர். (ச-41)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.6

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, இலங்கை இளைஞர்கள் கழக சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடுசெய்த 35ஆவது தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்டச் சம்மேளனங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. மேற்படி விளையாட்டு விழாவில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பிரதம விருந்தினராகவும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுப்புன் விஜரத்ன, யாழ்.மாவட்டச் செயலர் சார்பாக யாழ்.மாவட்ட உதவிச் செயலர் செல்வி உ.தர்சினி, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைப்பாளர் சு.கபிலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# ஏன் இந்தச் சமரசம்...?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக பிரிட்டனால் கொண்டு வரப்பட்ட புதிய பிரேரணையில், 'இனப்பிரச்சினை' என்ற சொற்பதம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக 'மோதல்' என்ற சொற்பதம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இலங்கையில் இனங் களுக்கு இடையில் பிரச்சினைகள் இல்லை. பயங்கரவாதத்துக்கு எதிரான போரும், மோதல் களுமே நீண்டகாலமாக இடம்பெற்றன என்று, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக் கள் சக்தி அரசாங்கமும், இதற்கு முன்னர் ஆட்சி யில் இருந்த அரசாங்கங்களும் மாறிமாறி சாதித்து வந்தநிலையில், அந்தக் கோரிக்கைகளை ஏற்றால்போல் அல்லது, கொழும்பின் கருத்துக்கு அடிபணிந்தாற்போல், சொற்பதங்களை மாற்றி யிருக்கின்றது பிரிட்டன்.

இந்தச் சொற்பதம் மாற்றப்பட்டதால், பிரேரணையின் தாக்கம் அல்லது பிரேரணையின் கனதி குறையாது என்று பிரிட்டன் கூறுகின்றது. எனினும், இது வெறும் சப்பைக்கட்டு என்பது உலகறிந்த உண்மை. 'இலங்கையில் இடம்பெற்ற இனப் பிரச்சினை' என்பதற்கும், 'இலங்கையில் இடம் பெற்ற மோதல்கள்' என்பதற்கும் இடையி லான வேறுபாடு இமாலயமானது. இனப்பிரச் சினை என்ற சொல் வலியது. அது சர்வதேசத்தின் தலையீட்டை அதிகம் ஈர்க்கக்கூடியது. மாறாக, மோதல் என்ற சொல், தாக்கம் குறைவானது. அது சாதாரணமானது. இன்னும் சொல்லப் போனால், வீட்டுக்கு வீடு வாசற்படியாக பெரும் பாலான நாடுகளில் நிகழ்ந்தது நிகழ்கின்றது. ஆக, இலங்கையில் இடம்பெற்றவை ஒன்றும் பாரதூரமான குற்றச்செயல்கள் அல்ல என்று அநுர அரசு முரண்டு பிடிப்பதற்கான ஆரம்பப் புள்ளியே பிரிட்டனின் விட்டுக்கொடுப்பு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை யின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், இலங்கைக் குப் பயணம்மேற்கொண்டு பாதிக்கப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி தமிழ்க்கட்சி களின் தலைவர்களுடன் பேச்சு நடத்தி செம்மணியைப் பார்வையிட்டுச்சென்ற பின்னர், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் கள் தொடர்பில் சர்வதேசக் கண்காணிப்புட னான 'உள்ளக விசாரணையை' ஏற்றிருந்தார். அதற்கு ஒப்பானதுதான் பிரேரணையில் பயன்படுத்தும் சொற்கள் தொடர்பில் பிரிட்டன் மேற்கொண்டுள்ள விட்டுக் கொடுப்பும். பாதிப்பை ஏற்படுத்திய அல்லது குற்றஞ்சாட் டப்படும் தரப்பின் கருத்தைக்கேட்டு பிரே ரணையில் சொற்பயன்பாடுகளை மாற்றுவதென்றால், அந்தப் பிரேரணை வருவதும் ஒன்றுதான் வராமல் விடுவதும் ஒன்றுதான். அதில் தமிழர்கள் கொண்டாடுவதற்கோ அல்லது நம்பிக்கை வைப்பதற்கோ ஒன்றுமேயில்லை.

ஈழத்தமிழர்களின் வலியை அவர்களின் குரலை செம்மணிப் புதைகுழி உள்ளிட்ட பல புதைகுழிகள் சொல்லாமல் சொல்லிநிற்கும் செய்தியின் ஆழத்தை சர்வதேசம் புரிந்துகொள்ளவில்லை என்பது மட்டும் உண்மை. நீதிக்கான குரல்களில் எப்போதும் சமரசத்துக்கும் விட்டுக் கொடுப்புக்கும் இடமிருக்கக்கூடாது. மீறின், நீதியும் வளைக்கப்படும் என்பதே நியதி.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





**நாளொரு நல்வார்த்தை**

இலட்சியம் என்பது நட்சத்திரம். அதை கைக்குள் அடக்க முயன்றால் தோல்வி நிச்சயம்; அதை வழியாகப் பின் தொடர்ந்தால் சேருமிடம் நிர்ணயம்.

– கார்ல்ரூஸ் –



## அநுர அரசாங்கத்தால் நீதித்துறைக்குக் கடிவாளம்

ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.6

குறைந்த ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஹிட்லர் தனது அதிகாரத்தைத் தக்கவைக்க எதிர்க்கட்சிகளை ஒழித்தது போலவே, தேசிய மக்கள் சக்தியும் அதேவழியில் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதுடன் நீதித்துறையையும் கட்டுப்படுத்த முயல்கின்றது என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு அதிகரிப்பு மற்றும் அவற்றின் ஒன்றிணைவு குறித்து அச்சம் கொண்டுள்ள அரசாங்கம், ஒரு ஹிட்லர் போக்கிலான செயற்பாட்டை வெளிப்படுத்துகிறது. எதிரணியினருடன் அரசியல் ரீதியான எந்தப்பிரச்சினைகளாக இருந்தாலும், உள்ளூர் அரசியல் மேடைகளில் கருத்துத் தெரிவித்திருக்க வேண்டும். வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை குறித்தும் இங்குள்ள அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் விமர்சனங்களை முன்வைப்பது முறையற்றது. ஜனாதிபதியும் அவரது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இலங்கையில் தற்போதுசெய்வதுஎன்ன? மக்கள் மத்தியில் எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு தற்போது அதிகரித்துவருகிறது. அதனைத் தடுக்கவே அவர் கைதுநடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள். ஜனாதிபதி அநுரவின் மற்றொரு முயற்சி நீதித்துறையை அடிபணியச்செய்வதாகும். தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சிகளை ஒடுக்க நீதித்துறையைக் கட்டுப்படுத்த முயல்கிறது - என்றார். (ச-இ)

## விபத்தில் தம்பதி பலி

கொழும்பு, ஒக்.6

ஹொரணை மொரகஹஹேன வீதியில் கனன்வில பகுதியில் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிள் ஒன்று லொறியுடன் மோதியதில் இளம் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

மொரகஹஹேனப் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 24 வயதுடையவர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர். ஹொரணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



## விமலுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஒக்.6

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவைத் தங்காலைப் பொலிஸ் நிலையத்தில் இன்றுதிங்கட்கிழமை முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப் பட்டுள்ளது. 'பெலியத்த சனா' என்று அடையாளம் காணப்பட்ட ஒரு நபரைப் பற்றி அவர் தெரிவித்த கருத்தைத் தொடர்ந்து இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-இ)

## குருநாகலில் விபத்து; மூவர் உயிரிழப்பு!




குருநாகல், ஒக்.6

குருநாகலிலிருந்து நாரம்மல நோக்கிச் சென்ற லொறியொன்று கட்டுப்பாட்டை இழந்து கட்டுநாயக்கவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச்சென்ற பேருந்தின் மீது மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர். இறந்தவர்கள் பொலநறுவையைச் சேர்ந்தவர்கள் என்றும் 41, 80 மற்றும் 82 வயதுடையவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் நாரம்மல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



## 'லைசென்ஸ்' காலாவதி நீடிக்கப்படுகிறது காலம்!

சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய நீடிக்கப்படவுள்ள கால எல்லை தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார். (ச-இ)

**நாளை** செவ்வாய்க்கிழமை - புரட்டாதி 21

07.10.2025

சுபநேரம் : 10.32 - 12.02

ராகுகாலம் : 03.02 - 04.32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்தடி நீரை உறுதிசெய்ய நீர்ப்பாவனையாளர் வட்டம்!

காரைநகர் மக்கள் இணைந்து முன்மாதிரி உருவாக்கம்!



யாழ்ப்பாணம், ஒக்.6

நிலத்தடி நீரைப் பேணிப்பாதுகாத்து அந்த நீரையே எதிர்காலத்தில் தன்னியல்பாகப் பயன்படுத்தும் மாற்றத்தை நோக்கிய பயணத்தின் முதற்கட்டமாக காரைநகரில் பிரதிநிதிகளும், ஊர்மக்களும் இணைந்து நீர்ப்பாவனையாளர் வட்டத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்த நிகழ்வு "நீரைக் கொண்டாடுவோம்" எனும் தொனிப்பொருளில் காரைநகரில் சிவகாமி அம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முழுத்தீவுக்குமான பாதுகாப்பான நீர்வளத்தை உறுதிசெய்யும் செயற்பாட்டின் முதற்படியாக இந்த நீர்ப்பாவனையாளர் வட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அத்துடன் காரைநகர்க் கிராமம் வெளியிலிருந்து தாங்கிகளில் வரும் நீரைமட்டும் நம்பியிருக்காமல் நிலத்தடி நீரைப் பேணிப் பாதுகாத்து அந்த நீரையே எதிர்காலத்தில் தன்னியல்பாகப் பயன்படுத்தும் மாற்றத்தை நோக்கிய பயணத்தில் காரைநகர் முழுவதுமுள்ள ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளிலும் ஒன்பது நீர்ப் பாவனையாளர் வட்டங்களை உருவாக்கி அதன் ஊடாக நீர்வளம் பேணும் செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கடந்த ஐந்து ஆண்டுகளாக காரைநகர்க் கிராமத்தில் நடைபெற்ற நீர்சார் அளவீடுகள், ஆய்வுகளின் பெறுபேறுகளைத் தொடர்ந்து அடுத்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவுள்ள நீர் சார்ந்த தரவுகளைத் திரட்டும் பணிகள் பற்றியும், அதற்கு இசைவான வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட நீர் ஆளுகைக்குரிய மேலும் கட்டமைப்புகளை உருவாக்குவது பற்றியும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து கிராமமக்களின் முழுமையான பங்களிப்பில் உருவான "நீர்வளம் பேணுவோம்" நாடகமும், சித்தாகாஸ் நடன நிறுவனத்தின் இயக்குநரான இராசையா தனராஜின் பரதநாட்டிய ஆற்றுகையும், சிறார் நடன நிகழ்வும், நீர் சார்ந்த பேச்சும் இடம்பெற்றன. (ச-66-27)

# கலைஞர்கள் அத்திபாரம் பண்பாட்டு விழாக்களே!

யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 6

பல்வேறுபட்ட கலைஞர்களை அடையாளம் கண்டு கௌரவிக்க பண்பாட்டுப் பெருவிழாகள் வழிவகுக்கின்றன. கலை, கலாசாரம், பண்பாடுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கின்ற பணியைக் காலம் தோறும் தொடரவேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார். 2025 ஆம் ஆண்டுக்கான யாழ்.மாவட்டப் பண்பாட்டுப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓர் இனத்தின் அடையாளமான மொழி, பண்பாடு, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை அடுத்த சந்ததிக்கு கடத்துவதையே நோக்காகக் கொண்டு இவ்வாறான பண்பாட்டு விழாக்கள் ஏற்பாடுசெய்து நடத்தப்படுகின்றன. கலை, மொழி, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் கட்டிப் பாதுகாக்கப்படவேண்டும். பல்வேறுபட்ட கலைஞர்களை அடையாளம் கண்டு கௌரவிக்க வேண்டியது அவசியம். அந்தவகையில் தான் யாழ். முத்து விருது, இளங்கலைஞர் விருது ஆகிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது - என்றார். (ச-66)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் யாழ். மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு, யாழ் மாவட்ட சென்.ஜோன் அம்புலன்ஸ் படை ஆகியவை இணைந்து கடந்த முதலாம் திகதி கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயத்தில் சிறுவர்தின விழாவை நடத்தினர். இதன்போது மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக பொலிஸாரினாலும், முதலுதவி தொடர்பாக சென். ஜோன் அம்புலன்ஸினாலும் மாணவர்களுக்கு விழிப் புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (ச)



# பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு தராதரப்பத்திரச் சான்றிதழ்கள்

45 ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திர சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுறுபாய கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான பணிப்பாளர் ஸ்ரீமா திசாநாயக்க கலந்துகொண்டார்.

மற்றும் சிறப்பு விருந்தினர்களாக தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்திக்கான பணிப்பாளர் டபிள்யு.ஜ.எஸ்.குமார, நூலகத் துறைக்கான பணிப்பாளார் சரத் நந்த குமார, கொட்க்கல ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சு.பிரசாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27,40)



# சிறுமி துஷ்பிரயோகம்; தாத்தாவுக்குச் சிறை

மட்டக்களப்பு, ஒக்.6


மட்டக்களப்பில் 2015ஆம் ஆண்டு 14 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமியின் தாத்தாவுக்கு 30 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 30 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் சாட்சியங்கள், சான்றுப்பொருள்கள் மற்றும் சட்ட மருத்துவ அறிக்கைமூலம் சந்தேகநபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டதையடுத்து இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு இலட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (ச-இ)

# மன்னார் நறுவிலிக்குளத்தில் நீச்சல் தடாகம் திறந்துவைப்பு

மன்னார், ஒக்.6

மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நறுவிலிக்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுவரும் விளையாட்டு தொகுதியில் நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது. இதனை இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே திறந்துவைத்தார். விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் நிதியொதுக்கீட்டின்கீழ் சுமார் 94 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் இந்த நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், நானாட்டான் பிரதேச செயலாளர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர், நானாட்டான், முசலிப் பிரதேசசபைகளின் தவிசாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-41-56)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழைய பொருள்கள் சேகரிப்பதாக பாசாங்கு செய்து திருட்டுகள்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக்.6**

**உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பழைய பொருள்களைச் சேகரிக்கும் போர்வையில் திருட்டுகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.**

இதுதொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு கரவெட்டிப் பிரதேசசபையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வடமராட்சியின் உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பழைய பொருள்களைச் சேகரிக்கும் போர்வையில் பட்டா ரக வாகனங்களில் வருபவர்கள் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து அடாத்தாகப் பொருள்களைத் திருடிச்செல்லும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. கடந்த ஒரு மாதமாக மேற்படிப் பிரதேசங்களில் முதியவர்கள், பெண்கள் மற்றும் ஆளில்லாதவர்களின் வீடுகளை இனங்கண்டு வளவுக்குள் அத்துமீறி நுழையும் பழைய பொருள்களைச் சேகரிக்கும் போர்வையில் வருவோர் கையில் அகப்படும் பொருள்களையெல்லாம் அடாத்தாகத் திருடிச்செல்லும் சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன. இதுதொடர்பில் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும். இவ்வாறான சம்பவங்கள் நடந்தால் உடனடியாகத் தங்கள் பகுதியிலுள்ள கிராம அலுவலருக்கோ, பொலிஸாருக்கோ உடன் அறிவிக்க வேண்டுமெனவும் கரவெட்டிப் பிரதேசசபையின் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச-66)



# சாதனைக்குத் தடைகள் இல்லை மாற்றுத்திறன் சிறுவன் நிரூபிப்பு

மன்னார், ஒக்.6

முழங்காலுக்கு கீழே பாதிக்கப்பட்ட 12 வயதுடைய மாற்றுத்திறனாளிச் சிறுவன், பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்கள் நிறைந்த கடற்பகுதியான தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்திக் கடலை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை 9 மணி 11 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார். சென்னை முகப்பேர் மேற்குப் பகுதியைச் சேர்ந்த 12 வயதான புவி ஆற்றல் என்ற சிறுவனே இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார். இதற்கு முன்பதாக தலைமன்னார், தனுஷ்கோடி இடையிலான பாக்கு நீரிணை கடற்பகுதியை 20.03.2022 அன்று மும்பையைச் சேர்ந்த ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுமி ஜியா ராய் தனது 13 வயதில் நீந்திக் கடந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-56)

# பற்றைக்காடுகளாக வெற்றுக்காணிகள்

## குடியிருப்புகளுக்குள் விஷஜந்துகள் மன்னாரில் மக்கள் அவதி

மன்னார், ஒக்.6

மன்னார் நகரப் பிரதேச செயலாளர் பிரிவில் மூர்வீதிக் கிராமத்தில் வெற்றுக்காணிகள் பராமரிப்பின்றி பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றன.

இதனால் அருகிலுள்ள குடியிருப்புக ளுக்குள் விஷஜந்துகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காணி உரிமையாளர்கள் உரியமுறையில் பராமரிக்காத காரணத்தால் விஷஜந்துக்கள் எமது குடியிருப்புகளுக்குள் நுழைகின்றன. தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளமையினால் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

எனவே குறித்த பகுதியில் பராமரிப்பின்றிக் காணப்படும் காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக மன்னார் நகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-56)





தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மாற்றுத்திறனாளிகளுக்கான வீடமைப்புத்திட்டத்தின்கீழ் பச்சிலைப்பள்ளிப் பிரதேச இந்திராபுரம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாரசபையினரால் கையளிக்கப்பட்டது. (ச-9)



வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாணி விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வேவில் பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெற்றது. இதன்போது வேவில் விக்னேஸ்வரா அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள், வேவில் விக்னேஸ்வரா சங்கீத மாணவர்களின் இசைநிகழ்வுகள், வேவில் விக்னேஸ்வரா நடன மாணவர்களின் நடன நிகழ்வுகள், சிறுமிகளின் நடன நிகழ்வுகள் ஆகியன இடம்பெற்றன. (ச-41)

# ஆசிரியர் சங்க மாநாடு வவுனியாவில் நேற்று

வவுனியா,ஒக்.6

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியாக் கிளையின் மாவட்ட மாநாடு சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

'அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறைகளை முறியடித்து உரிமைகளை வென்றெடுப்போம்' எனும் தொனிப்பொருளில் குறித்த மாநாடு முன்னெடுக்கப்பட்டது.

சங்கத்தின் வவுனியாக் கிளையின் தலைவர் பா.நேசராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின், தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, வடக்கு மாகாண உபதலைவர் தீசன் திலீபன், உபதலைவி ரசிக்கா உட்பட சங்கத்தின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கல்வியில் அரசியல் தலையீடு

## ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

**வவுனியா,ஒக்.6**

**வவுனியாவில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தினரால் நேற்று ஆர்பாட்டப்பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கப் பகுதியில் ஆரம்பமான குறித்த பேரணி மணிக்கூட்டுகோபுரச் சந்தியை அடைந்து அங்கு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுபோதினி அறிக்கையின் நிலுவைசம்பளத்தை வழங்கு,தரமான கல்விக்கு வளங்களைச் சரியாகப் பகிர்ந்தளி,கல்வியில் அரசியல் தலையீட்டை நிறுத்து, பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழி, அதிபர் ஆசிரியர்களை வீதியில் நிறுத்தாதே போன்ற கோஷங்களை முன்வைத்தி ருந்ததுடன், பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (ச-110)

# ராஜபக்சக்களை விரட்டியது மக்களின் பெருந்தவறு!

## கூறுகிறார் ஜோன்ஸ்டன்

கொழும்பு,ஒக்.6

30 வருடகாலம் நிலவிய போரை முடிவுக்குக் கொண்டுவந்த தலைவரான மஹிந்த ராஜபக்ச தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதால்தான் இந்நாடு வீழ்ந்தது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் உறுப்பினர், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் கொடியைக் கண்டாலேயே இந்த அரசாங்கத்துக்கு நடுக்கம் ஏற்பட்டு விடுகின்றது.

தற்போது வந்துள்ள பயம் தோல்விப் பயமாகும். அந்தப் பயம் தொடரட்டும். எந்தவொரு கட்சியாலும் ஆட்சியில் நீடிக்கமுடியாது. போரை முடிவுக்குக் கொண்டுவந்த மஹிந்த ராஜபக்சகூட தோல்வி அடைந்தார். அது மக்களால் இழைக்கப்பட்ட பெரும் தவறு. அதனால்தான் இந்நாடு வீழ்ந்தது - என்றார். (ச-44)



யாழ்.அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் சர்வதேச சிறுவர்தின விழா அதிபர் மணியம் கருணாமூர்த்தி தலைமையில் கடந்த புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-41-66)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 07 . 1940



மறைவு 06 . 10 . 2022

### அமரர் சண்முகம் கனகம்மா
### (வெள்ளையம்மா)

கனகம்மா எனும் எங்கள்
வெள்ளையம்மா
வெள்ளையம்மா - இது
எங்கள் வரலாறு படைத்திட்ட வீர
மறவர்கள் வைத்த பெயர்
விடுதலைத்தீயினலே களமாடி
வெந்து தினம் ஓடி வரும் வீர
மறவர்களின் பசிதாகம் தீர்த்த
தாயம்மா
வானரப்படைகள் சூழவந்து எம்
வாசலை வட்டமிட்ட போதெல்லாம்
வாஞ்சையுடன் அரவணைத்து
அடைகாத்து உணவளித்து உயிர்காத்த
உத்ம வீரத்தாய்
வெள்ளையம்மா
உங்கள் உள்ளம் வெள்ளை
உங்கள் அன்பு வெள்ளை
உங்கள் பாசம் வெள்ளை
உங்கள் நேசம் வெள்ளை
உங்கள் ஆறுதல் வெள்ளை
உங்கள் அரவணைப்பு வெள்ளை
பேருக்கேற்ற பேரழகி எங்கள்
வெள்ளையம்மா
ஆண்டுகள் பல சென்றாலும்
மாறாதம்மா
உங்கள் நிழல்தவழ்ந்த
வீரக்குழந்தைகளின்
மனங்களில் நிலையாக
நிறைந்திருப்பீர்கள்
இந்த உலகம் முழுவதும்
தேடினாலும் அகராதியைப்
புரட்டினாலும் நீங்கள் காட்டிய
தாயன்புக்கு நிகராகுமா? அன்பால்
நிறைந்த அரண்மனையே
நேசிப்பின் சிகரமே தேவைகளை
விசாரிதறிந்து நிறைவேற்றும்
தெய்வமே என்ன வேணும் என்று
கேட்காமலே முகம் பார்த்து
பசியறியும் பக்குவம் அம்மாவுக்கு
நிகர் அம்மாவே.

மருதங்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

என்றென்றும் உங்கள் நினைவு சுமந்து வாழும்
குடும்பத்தினர் மற்றும்
நீங்கள் வளர்த்த பிள்ளைகள்

(CS 19581) E.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 09 . 1952



மறைவு 17 . 10 . 2024

### அமரர் வல்லிபுரம் கருணாகரன்

கண்ணுக்கு ஒளியாய்
நெஞ்சத்தில் நிலையாய்
என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய்
என்றும் எங்களை
வழிநடத்த வணங்குகின்றோம்
நீங்கா நினைவுகளுடன்...

அளவெட்டி மத்தி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் முல்லைத்தீவில் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஒக்.6
விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்து வதிலுள்ள இடர்பாடுகளைக் களைந்து, சந்தைப்படுத்தலை வினைத்திறனாக்கு வது தொடர்பிலான கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட விவ சாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.
கலந்துரையாடலில் வடமாகாண விவசா யப் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் போத னாசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண் டனர்.
இதன்போது தற்போது முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் தமது விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்குகின்ற சவால்கள் தொடர்பில் வடமாகாணப் விவசாயப் பணிப்பாளர் மற்றும் பிரதி மாகாண விவசாயப் பணிப் பாளர், விவசாயப் போதனாசிரியர்கள் ஆகியோரிடம் நாடாளுமன்ற உறுப்பி னர் கேட்டறிந்துகொண்டதுடன் அந்த சவால்களைக் களைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதை இலகுவாக்குவது தொடர்பான ஆலோசனைகளையும் கேட்டறிந்துகொண்டார். (ச-41-246)

# வவுனியா மாவட்டத்தில் 20 வீடுகள் கையளிப்பு

வவுனியா, ஒக்.6
நாடு பூராவும் உலக வதிவிட தினத்தின் 39 ஆவது ஆண்டினை முன்னிட்டு 'என்னுடைய இடமும் அழகான வாழ்க்கையும்' எனும் தொனிப்பொருளில் வீடு கையளிக்கும் நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.
வவுனியாவில் உள்ள நான்கு பிரதேசசபை பிரி வுகளிலும் 20 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளது டன், 62 பேருக்கு உறுதிப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ச-110)





# யாழ்ப்பாண மாவட்டத்தில் 80 வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6
யாழ்.மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 80 வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கைய ளிக்கும் நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அந்தந்தப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைபெற்றன.
இதற்கமைய, நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கோண்டாவில் நாகபூஷணி அம்மன் கோவிலடியில் பய னாளி ஒருவருக்குப் பத்து இலட்சம் ரூபா பெறுமதியில் புதி தாக நிர்மாணிக்கப்பட்ட வீடு யாழ்.மாவட்டச் செயலர் மருத லிங்கம் பிரதீபனால் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட் டது. நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யின் பொதுமுகாமையாளர், தேசிய மக்கள் சக்தியின் நல் லூர் பிரதேசசபை உறுப்பினர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-66)




# மார்பகப் புற்றுநோய்த் தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஒக்.6
கிளிநொச்சியில் இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வுக்கருத்தரங்கும் மருத் துவப் பரிசோதனை நிகழ்வும் கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றன.
ஒக்ரோபர் மாதம் மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு மாதமாக பிரக டனப்படுத்தப்பட்டுள்ளது.
அதன்படி குறித்த நிகழ்வில் மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகள் நடத்தப்பட் டதுடன் மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதற்கான நடைமுறை கள் குறித்து மருத்துவர்களால் விளக்கமளிக் கப்பட்டது.
அத்துடன் மார்பக சுயபரிசோதனை பற்றிய செய்தியை பொதுமக்களிடம் கொண்டுசெல்லும் முகமாக இருபாலருக்குமான 200 மீற்றர் நீச்சல், 5 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டம், 1.25 கிலோமீற்றர் ஓட்டம் ஆகிய போட்டிகளும் நடத் தப்பட்டன.
நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செய லர் எஸ்.முரளிதரன், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல, பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் வி.ஆனந்த சங்கரி, மதத்தலைவர்கள், மருத்துவ நிபு ணர்கள், இந்திரா புற்று நோய் அறக்கட்டளை அதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், விளை யாட்டுப் பிரிவு உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும்கலந்துகொண் டனர். (ச-113)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம்
19 . 02 . 1945

மறைவு
05 . 10 . 2025

முத்தையா குணரெத்தினம் (கிளிப்பத்தர்)
(வைரமாளிகை முன்னாள் ஊழியர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா குணரெத்தினம் அவர்கள் நேற்று (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 628 2830,
075 522 7046

இல. 11/3 விவசாயக்கந்தோர் ஒழுங்கை,
முத்திரைச்சந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 17.09.2024 செவ்வாய்க்கிழமை
அன்று இறைபதமடைந்த
அமரர்
**தயாசீலன் வைஸ்ணவன்**

தோற்றம் 26.08.1995
மறைவு 17.09.2024

அவர்களின் முதலாம் ஆண்டுத்திவச ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (06-10-2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெறவுள்ளது. இந்நிகழ்விலும், அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியால யத்தில் சிறுவர் தினவிழா உப அதிபர் ஆ.மதனராஜ் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிரேஷ்ட சட்டத்தரணி சோ.தேவராஜா, சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை ஆசிரியை திருமதி.கமலாதேவி வேலாயுதம் ஆகி யோர் கலந்துகொண்டனர். (ச-25)

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் நவராத்திரி தினத்தை முன்னிட்டு தோரணம் கட்டுதல், மாலைகட்டு தல் போட்டிகள் சிறப்பாக இடம் பெற்றன. (ச-25)





ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அன லைதீவு தெற்குக் கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற கிராமமட்ட அலுவலர்களுக்கு பிரதேச மக்களால் பிரிவுபசார விழா அனலைதீவு மனோன்மணி அம்பாள் கோவில் மண்டபத்தில் அண்மை யில் நடத்தப்பட்டது. (ச-25, 9)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மூன்று நாள் சுளகு பின்னல் பயிற்சி நெறி மறவன்புலவு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஆரம்பசுகாதார நிலை யத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-25,9)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நடை முறைப்படுத்தப்படும் 'உங்களுக்கு ஒரு வீடு நாட்டிற்கு எதிர் காலம் 2025' என்னும் கருப்பொருளில் அமைந்த மானிய வீட்டுத்திட்டம் வேலணைப் பிரதேச செயலக பிரிவின் அல் லைப்பிட்டி கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் கைய ளிக்கப்பட்டது. (ச-9)







கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் விஜயதசமியை முன்னிட்டு சிறுவர்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை சமய வழிபாடுகளுடன் இடம்பெற்றது. (ச-41-17)

மன்னார் பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலயத்தில், வாணி விழா அண்மையில் இடம்பெற்றது. கல்லூரி அதி பர் திருமதி ஜே.எஸ்.விவியன் பீரீஸ் தலைமையில் இடம் பெற்றநிகழ்வில், மாணவர்களின் கலைநிகழ்வுகளும், இந்து மதம் சார்ந்த போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில் வழங்கலும் இடம்பெற்றன. (கு-60)



இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் வாணி விழா அதிபர் தி.அப ராஜிதன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது. இதன்போது பண்ணிசை, கோலம் போடுதல், மாலைகட் டுதல் மற்றும் பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர் களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ரு-25, 159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவாத்...

கடந்த செப்ரெம்பர் மாதத் தொடக்கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரைவுத் தீர்மானத்தின் முக்கிய ஆதரவாளர்களாக பிரிட்டன், கனடா, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா ஆகிய நாடுகள் செயற்படுகின்றன. இந்தநிலையில் 22 நாடுகள் கடந்த முதலாம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரைவுத் தீர்மானத்துக்கு இணை அனுசரணையாளர்களாகக் கையொப்பமிட்டுள்ளன. இலங்கைத் தீர்மானத்தை ஆதரிக்கும் 27 நாடுகளில் பத்து நாடுகள் தற்போதைய சுழற்சிக்கான, ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களாக உள்ளன. இந்தத் தீர்மானம் எதிர்வரும் 8 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, இந்த ஆணை நீடிப்பு இலங்கையை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மேற்பார்வையின் கீழ் வைத்திருக்கும். இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டத்தின் காலமும் இந்தத் தீர்மானத்தின்மூலம் நீடிக்கப்படும்.

புதிய தீர்மானம், அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு முயற்சிகளையும், நாட்டில் பல தசாப்தங்களாக பிளவுபடுத்தும் இனவெறி அரசியல் மற்றும் இன மோதல்களின் விளைவாக ஏற்பட்ட தீங்குகள் மற்றும் துன்பங்களை ஒப்புக்கொள்வதையும் வரவேற்கிறது. சுயாதீனமான பொது வழக்குரைஞர் அமைப்பை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை பாராட்டுடன் ஒப்புக்கொள்கிறது. அதேநேரத்தில் இது முற்றிலும் சுயாதீனமாகவும், பயனுள்ளதாகவும், வலுவாகவும் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. (அ-எ-இ)

## செம்மணிப்...

வினர்கள் அறிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் கிளிநொச்சியில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் இதைத் தெரிவித்ததுடன், அனைத்துத் தரப்பினரும் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இந்தப் போராட்டத்துக்கு அனைத்து சமூக மட்ட அமைப்புக்கள், சர்வமத அமைப்புகள் சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் என அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்கி, போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இணைந்துகொள்ளவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். (அ,எ-இ)

## அஞ்சல்...

நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அஞ்சல் திணைக்களத்தில் 2021 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அஞ்சல் உதவியாளர்கள் நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்படாததால், கடந்த ஆண்டின் இறுதியில் ஆயிரத்து 982 வெற்றிடங்கள் ஏற்பட்டன. இதனால் திணைக்களத்தின் நடவடிக்கைகள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கின.

இதைக் கருத்தில் கொண்டு, அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் கோரிக்கைக்கு அமைய, இந்த வெற்றிடங்களில் ஆயிரம் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை கடந்த ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி ஒப்புதல் அளித்தது. தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்த, அஞ்சல் திணைக்களத்தில் இதுவரை பதிலீட்டு ஊழியர்களாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தவர்களில் இருந்து 731 பேர் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். எஞ்சிய 269 வெற்றிடங்களுக்கான ஏனைய அஞ்சல் உதவியாளர்களையும் விரைவில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு எடுத்துவருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## பிற்பகலில்...

அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழையுடன் கடும் காற்று மற்றும் மின்னல் தாக்கத்தால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்ப தற்கான முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

## ஹெரோய்ன்...

குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 7 கிராம் ஹெரோய்ன், 16 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 120 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். குருநகரைச் சேர்ந்த 51 வயதான இந்தச் சந்தேகநபர் கடல் வழியாகப் போதைப்பொருள்களைக் கடத்திவந்து விற்பனை செய்து வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ,எ-26)

## குமரப்பா...

துறை தீருவில் திடலில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் , தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம்தலைமையில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது. இரு நிமிட அகவணக்கத்தைத் தொடர்ந்து, பன்னிருவரில் ஒருவரான அன்புமலகனின் சகோதரர் பொதுச்சுடரை ஏற்றினர். தொடர்ந்து மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன் நினைவுரை ஆற்றினார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் மற்றும் தமிழ்த் தேசியப் பேரவையின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ,எ-66)

## மாங்குளத்தில்...

என்புக்கூட்டை அவதானித்த நிலையில், மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

நேற்றுக்காலை சம்பவ இடத்துக்குச் சென்ற தடயவியல் பொலிஸார் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மாங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ,எ-இ)

## தேர்தல்...

2025 சர்வதேச தேர்தல் விருது வழங்கும் நிகழ்வில், இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு ஆண்டின் சிறந்த தேர்தல்கள் ஆணைக்குழுவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருதை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க பெற்றுக்கொண்டார். (அ,எ-இ)

## யாழ்.பல்கலைக்கழக...

இந்த ஆய்வுமாநாட்டில் முதன்மை விருந்தினராக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். ஆய்வு மாநாட்டுக்கு கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமை தாங்கவுள்ளார். இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின்சமூகவிஞ்ஞானத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ். சந்திரபோஸ் சிறப்புரையை ஆற்றவுள்ளார். இம்முறை நடைபெறும் ஐந்தாவது மாநாடு "வெவ்வேறு துறைகளை இணைத்து மாற்றங்களை வலுவூட்டுவதற்காக அறிவைச் செயற்படுத்துதல்" என்னும் தொனிப்பொருளோடு16 ஆய்வுத் தடங்களில் நடைபெறவுள்ளது. இளங்கலைமாணி பட்டக்கற்கையின் இறுதியாண்டில் மாணவர்கள் நிறைவுறுத்திய ஆய்வுகளின் அளிக்கையாக இந்தமாநாடு அமையவுள்ளது. (ச-20)

## அரசாங்கத்தை...

னித்துள்ள எதிர்க்கட்சிகள், அது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச மற்றும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பில் ஒன்றுக்கூடி கலந்துரையாடிய போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள், உறுப்பினர்களின் விசேட சந்திப்பு மற்றும் இரவு விருந்துபசார நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பில் உள்ள ஒரு தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன வின் அழைப்பின்பேரில் இந்த நிகழ்வில் 25க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

சமகால அரசியல் விடயங்கள் மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் உட்பட பல தீர்மானங்கள் அதில் எடுக்கப்பட்டுள்ளன. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக தொடர்ந்தும் செயற்படுவதற்கான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. எதிர்க்கட்சியாக ஒன்றிணைந்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கூட்டு நடவடிக்கைகள் தொடர்பாகவும் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. இந்தச் சந்திப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து யோசனைகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நமால் ராஜபக்ச உள்ளிட்ட தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும் முக்கியமானதாகவும் இருந்தது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (அ,எ-இ)

## பதில்...

யாழ்ப்பாணம், ஒக்.6

கொடுப்பனவுகள் வழங்கப்படாது கிராம அலுவலர் பிரிவுகளில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாளைமுதல் பதில் கடமைப் பிரிவுகளின் அனைத்துக் கடமைப்பொறுப்புகளில் இருந்து விலகிக்கொள்ளத் தீர்மானித்துள்ளனர் என்று அகில சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவியாளர் உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிக்களப் பணியில் நிரந்தர கிராம அலுவலர் பிரிவுடன், பதில் கடமை கிராம அலுவலர் பிரிவுகளில் மிகுந்த அர்ப்பணிப்புடன் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலருக்கு ஒரு ஆண்டுக்கு மேலாகப் பதில் கடமைக் கொடுப்பனவுகள் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ள அந்தச் சங்கம், அதனாலேயே பதில் கடமைகளில் இருந்து விலகியிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் உத்தியோகத்தர்கள் பதில் கடமைக் கொடுப்பனவுகள் இன்றிக் கடமையாற்றுவதால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இது தொடர்பாக பல தடவைகள் உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட ரீதியாகக் கோரிக்கைகளை முன்வைத்தும் எந்தவிதமான சாதகமான பதில்களும் கிடைக்கவில்லை. தேசிய தொழிற்சங்கம் ஊடாகக் கடந்தவாரம் இந்த விடயத்தை எமது திணைக்களத்துக்குக் கொண்டுசென்றபோது, யாழ். மாவட்டத்தில் போதிய ஆளணி உண்டு என்றும் அதனால் பதில் கடமைக் கொடுப்பனவுகள் வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள.தே து. அதனால் தற்போது பதில் கடமையில் ஈடுபடும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாளைமுதல் பதில் கடமைப் பிரிவுகளின் அனைத்துக் கடமைப்பொறுப்புகளில் இருந்தும் விலகிக் கொள்ளத் தீர்மானித்துள்ளோம். பதில் கடமைக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் பட்சத்தில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றத் தயாராக உள்ளோம் என்று அந்தச் சங்கம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. (அ,எ-இ)

## விற்ற பொருளுக்கு...

ஏழாலை கிழக்கில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு இருவர் மதுபோதையில் சென்றுள்ளனர். அங்கு மிக்ஸர் வாங்கிய அவர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர் பணத்தைக் கேட்டபோது கொடுக்க மறுத்தனர் என்று கூறப்படுகின்றது. அதனால் முரண்பாடு ஏற்பட்ட நிலையில், மிக்ஸர் வாங்கிய இருவரும் தமது உடைமையில் வைத்திருந்த கத்தியை எடுத்து வர்த்தக நிலைய உரிமையாளர் மீது சரமாரியாகக் குத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். வர்த்தக நிலைய உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில், அயலவர்கள் அவரை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும், அவர் உயிரிழந்தார்.

தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் உடல் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சுன்னாகம் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-26,20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணி விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 6
நெடுங்கேணி - முல்லைத்தீவு வீதியில் நெடுங்கேணி சந்தியில் நேற்று மாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி வீதியில் நின்ற கால்நடையுடன் மோதி விபததுக்குள்ளாகியுள்ளனர்.
நெடுங்கேணி 17ஆம் கட்டடையைச் சேர்ந்த க.செல்வகுமார் (வயது69) ) என்பவரே உயிரிழந்துள்ளார். மனைவி படுகாயமடைந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நெடுங்கேணி பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது. (எ-19)

# இராணுவ வாகனம் மோதி குடும்பப் பெண் படுகாயம்

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் இராணுவ கப் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பப் பெண் படுகாயமடைந்துள்ளார். புதுக்குடியிருப்பு, இரணைப்பாலையைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணே படுகாயமடைந்துள்ளார். அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-19)

**TUITION CLASSES**
Zoom மூலமும் அல்லது
தனியாகவும் அல்லது குழுவாகவும்
வீடுவந்து கற்பிக்கப்படும்.
- English for All
- Mathematics
- Science
தமிழ்மூலம், ஆங்கிலம் மூலமும்.
**T.P- 077 331 4608**

# விசுவமடுவில் அபிவிருத்திப்பணி; குழப்பியடிக்கின்றது தே.ம.சக்தி!

## புதுக்குடியிருப்புப் பிரதேசசபை தவிசாளர் குற்றச்சாட்டு


வவுனியா, ஒக். 6
முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசசபைக்கு உட்பட்ட விசுவமடு மேற்குப் பகுதியிலுள்ள நெத்தலியாறு பாடசாலை வீதியின் அபிவிருத்திப்பணிகளை தேசிய மக்கள் சக்தியின் கட்சி சார்ந்தவர்கள் குழப்பியதால் பணிகள் தடைப்பட்டுள்ளன என்று புதுக்குடியிருப்புப் பிரதேசசபைத் தவிசாளர் வே. கரிகாலன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்-
பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக புதுக்குடியிருப்புப் பிரதேசசபைச் செயலாளரது முயற்சியின் பயனாக 2025ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியூடாக குறித்த வீதி புனரமைப்பு வேலைக்கான ஆரம்ப நிகழ்வு தொடங்கிவைக்கப்பட்டது. குறித்த அபிவிருத்தி இரு கட்டங்களாக 970 மீற்றர்கள் தூரவீதி 14.28 மில்லியன் ரூபாவில் முன்னெடுக்கப்பட்டது.
இந்தநிலையில் இந்த வீதி அபிவிருத்திப் பணியில் திருப்தி இல்லை என பிரதேசமக்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளதுடன் ஒப்பந்தக்காரரை ஏசிவிரட்டியுள்ளனர். குறித்த வீதி அபிவிருத்தி வேலை சரியில்லை எனில் அதனைப் பிரதேசசபையிடம் மக்கள் தெரிவிக்கவேண்டும். இதனைவிடுத்து பிரதேசத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களுடன் இணைந்து ஒப்பந்தகாரர்களை அச்சுறுத்தியுள்ளனர்.
இதனால் ஒப்பந்தக்காரர் தொலைபேசியில் தொடர்புகொண்டும் பதிலளிக்கவில்லை. இந்தநிலையில் சபையினால் ஒப்பந்தக்காரருக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. - என்றார். (ச-19)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 11 வீடுகள் கையளிப்பு!

கிளிநொச்சி, ஒக். 6
கிளிநொச்சி மாவட்டத்தில் வீடமைப்பு அதிகாரசபையினரால் 10 இலட்சம் ரூபா பெறுமதியான 11 வீடுகள் வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுநடைபெற்றது.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர், வீடமைப்பு அதிகாரசபையினர், கிராம அலுவலர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-113)



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு




கடந்த 08.09.2025 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது பாசமிகு தந்தை
அமரர்
**நாகேசு சாந்தலிங்கம் (தம்பு)**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.10.2025) திங்கட்கிழமை காலை 07.00 மணியளவில் **"சாட்டி வெள்ளைக் கடற்கரையிலும்"** வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (08.10.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **"அன்னாரது இல்லத்திலும்"** நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

8ம் வட்டாரம், வேலணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்

# முதலாம் ஆ[illegible]

தோற்றம்
31 • 01 • 1945



மறைவு
17 • 10 • 2024

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த 17.10.2024
வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
**அமரர் திரு சுப்பிரமணியம் வீரசிங்கம் (மகேஸ்வரன்)**
**(ஓய்வு நிலை அதிபர்)**
**அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

எங்கள் அன்பு அப்பா!
ஆண்டு ஒன்று ஆனாலும்
உங்கள் அன்பு முகமும்
அரவணைக்கும் புன்னகையும் மறையவில்லை

எங்கள் அன்பு அப்பா!
எல்லோருக்கும் பிரதிபலனின்றி,
உதவி செய்யும் பெருந்தன்மையும்
சிறுவர், பெரியவர் பாராது அளவளாவும் குணமும்
எல்லோருக்கும் பிடிக்கும் அப்பா

நேர்மையின் திருவுருவே,
துணிவின் சிகரமே
அன்பின் மறு உருவே
கண்டிப்பின் அளவு கோலே

நொடிப் பொழுதில் எங்களை
வருந்த விட்டுச் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் நீங்காது

இல 10, கோணாவளை வீதி
கொக்குவில் கிழக்கு
(புங்குடுதீவு, 2ம் வட்டாரம்)

குடும்பத்தினர்
077364 0579

(CS 59554) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org